`ராப்' இசைப் பாடகர் வேடன் நேற்று (8.6.2026) தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இச்சந்திப்பின்போது, அவருக்கு கழக இளைஞர் அணி சார்பில் வெளியிடப்பட்ட `காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு: தி.மு.க. 75' நூலையும், தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலையையும் வழங்கி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்.

சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை! ஜலீல் முஸ்தபா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில்

குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

GenZ DMK யாசர் அராபத் காணொலியில் சிறப்புரை!

குவைத், ஜூன் 9

குவைத்தில் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா மக்கள் எழுச் சியுடன் கொண்டாடப்பட் டது. பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் GenZ DMK யாசர் அரபாத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றி னார்.

தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீரா சாமி எம்.பி மற்றும் செயலா ளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா (முன்னாள் மாநி லங்களவை உறுப்பினர்) ஆகி யோரின் வழிகாட்டுதலின்படி, கடந்த 5.6.2026, வெள்ளிக்கி ழமை அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா குவைத் நாட் டில் மக்கள் எழுச்சியுடன் மிகப்பிரமாண்டமாக கொண் டாடப்பட்டது.

அமைப்பின் மகளிர் அணி யினர் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ் விழாவிற்கு, தி.மு.க., அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை ஏற் றார், அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ் தபா நிகழ்ச்சியை ஒருங்கி ணைத்தார்.

அமைப்பின் இணைச்செய லாளர்கள் ஆயங்குடி ஜெ. சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லதுரை, குடந்தை சி.தியாகராஜன், துணைச் செயலாளர்கள் விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர் பேட்டை மு.நஜீர் அகமது ஆகி யோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலா ளர் ராமநாதபுரம் பைசான் அலி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாட் டில் தற்போது இளைஞர்களி டம் அரசியல் புரிதலோடு எழுச்சியை உண்டாக்கி இருக் கும் Genz DMK Meetup எனும் ஓர் நிகழ்வை நடத்தி இளைஞர் கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய Genz DMK ஒருங்கி ணைப்பாளர்களில் ஒருவரான யாசர் அராபத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

அப்பொழுது தமிழகத்தில் நடக்கும் ஆட்சியின் அவல நிலை குறித்தும், கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும், முத் தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு செய்த பல நலத்திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் நிர்வாகிகள் குடந்தை த.மணி கண்டன், ராதாபுரம் அஜி ஜூல்லா, விழுப்புரம் எஸ்.அம் ஜாத், மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, அரியலூர் சௌமியா பாஸ்கரன், தானிப் பாடி சுல்தானா, தானிப்பாடி சே.அஸ்ரப்அலி, உடையார்பா ளையம் செந்தில்குமார், பண் ருட்டி ஒ.பி.எஸ்.சிவராமன், திருக்கோவி லூர் அ.பொன் முடி, அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், அரியலூர் பாஸ் கரன், கூத்தாநல்லூர் ஏ.சாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை எஸ்.முகமது உசேன், கொர டாச்சேரி காளிமுத்து, கோட்டை பி.மோதிலால், ஆத் தூர் ஜான் பாஷா, மங்கலம் பேட்டை அப்துல் முஜீர், தியா கதுருகம் பி.காதர், லட்சுமாங்குடி சசிகுமார், பர மக்குடி மோகன், திருவாரூர் திருவரங்கன், விருத்தாசலம் ஜெ.முபாரக், உளுந்தூர் பேட்டை என்.சுப்பிரமணி யன், குடந்தை ஆர்.முருகன், கள்ளக்குறிச்சி சின்னசாமி மற் றும் மருத்துவர் கிளாட்வின் பாக்கியராஜ், தளபதி பேரவை பாவாஷா கவிஞர் மற்றும் எழுத்தாளரான நிர்மலா தேவி தமிழரசன், சமூக ஆர்வலர் சாமுண்டீஸ்வரி, சமூக ஆர்வ லர் ரிஸ்வான்,

கூட்டணி கட்சிகளான திராவிடர் கழகம், தேமுதிக ம.ஜ.க, தமமுக, எஸ்.டி.பி.ஐ. தமிழ் அமைப்புகளான நந்தவ னம், வெளிநாடு வாழ் தமிழர் கள் நல சங்கம், தமிழ்நாடு பொறியாளர் குழுமம், அகில இந்திய திருவள்ளுவர் பத்திரிக் கையாளர் சங்கம், கலகலப்பு நண்பர்கள், தமிழ்நாடு முஸ் லிம் கலாச்சார பேரவை, உத வும் கரங்கள், குவைத் தமிழ் ஓட்டுநர் சேவை மையம், தமி ழர்கள் ஓட்டுநர் சேவை மையம், குவைத் தமிழ் மக்கள் சேவை மையம் மற்றும் பல சமூக ஆர்வலர்களும், சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு மறைந்த முத் தமிழ றிஞர் கலைஞர் அவர்க ளின் பிறந்தநாளில் அவரின் புகழையும்,அவர் தமிழக மக்க ளுக்கு செய்த தொலைநோக்கு திட்டங்களையும் புகழ்ந்து கூறி னார்.

நிகழ்வில் முத்தாய்ப்பாக விழா மேடையில் முழுவதும் பெண்கள் மட்டுமே அமர வைத்து திராவிட முன்னேற்ற கழகம் என்னாளும் பெண்க ளுக்கு பாதுகாப்பாகவும், பெண்களை மதிக்கக் கூடிய இயக்கமாகவும் இருக்கும் என் பதை பறைசாற்றினர்.

இந்நிகழ்வில் பல மாற்றுக் கட்சி சகோதரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங் களை இணைத்துக் கொண்ட னர்.

இதில் திருப்பத்தூர் மாவட் டம், காட்டேரியை சார்ந்த அமுல்ராஜ், ஏஞ்சலின் பிரதிபா தம்பதியினர் கணவன் மனைவி யாக வந்து தங்களை இயக்கத் தில் இணைத்துக் கொண்டது சிறப்புமிக்க தருணமாக இருந் தது.

விழாவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்க ளுக்கு 103 வது பிறந்தநாள் வாழ்த்து கூறும் விதமாக அவ ரின் உருவம் பதித்த கேக் வெட் டப்பட்டது அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. கேக் வெட்டும் தருணத்தில் வாழ்க... வாழ்க.. வாழ்கவே.. கலைஞர் புகழ் வாழ்கவே... என கழக உணர்வாளர்களின் முழக்கம் அரங்கை அதிரசெய் தது.

இந்நிகழ்வின் இறுதியில் அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவு மணி மற்றும் துணைப் பொருளாளர் திருவ டத்தனூர் ஏ.எஸ்.முகமது ரபீக் ஆகியோர் நன்றி கூறினர்.

அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

மாவட்ட செயலாளர் – பி.கே.சேகர்பாபு முன்னிலை! பாஜெகதீஷ் தலைமை!

துறைமுகம் மேற்கு பகுதி மாவட்ட இளைஞரணி சார்பில் கலைஞர் புத்தெழுச்சி நாள்!

700 வட இந்தியர்களுக்கு நல உதவிகளை ஆர்.எஸ்.பாரதி – கழக இளம் பேச்சாளர் மு.ரோஜா வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன்.9-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்கு பகுதி மாவட்ட இளைஞரணி சார் பில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்- புத்தெ ழுச்சி நாள் விழாவை முன் னிட்டு "புத்தெழுச்சி-10", "எல்லோரும் உறவென் போம்! இறையாண்மை உயி ரென்போம்!! எனும் தலைப் பில் மாபெரும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா 10/6/2026, புதன்கிழமை அன்று மாலை 4. மணியள வில், சென்னை, யானை கவுனி ரமணன் சாலையில் நடைபெறுகிறது.

இந் நலத்திட்ட வழங்கும் விழாவில் மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் தலைமை வகிக் கிறார்.

சென்னை கிழக்கு மாவட் டக்கழக செயலாளர் பி. கே.சேகர்பாபு, பகுதி செய லாளர்கள் எஸ் முரளி, எஸ் ராஜசேகர், வானவில் விஜய்,தொகுதி பார்வையா ளர் பகுதிக் இரா. நரேந்திரன், எம் விஜயகுமார், பி. ஸ்ரீரா முலு எம் சி, ராஜேஷ் ஜெயின் எம் சிஜி மகாதேவன்,,இசட் ஆசாத் என்.பி.எம்.ஷேக் அப் துல்லா, வே பரிமளம் எம் சி காக்கா எல் நவீன் எம் சிஆர் கலைச்செல்வி, எம். இப்ரா ஹிம் கனி, நா.ராஜ்சித் விஜயா லயன் பி. விஜயகுமார், எம். விநாயகம், பா. பிரதீப் குமார், எல். சம்பத் குமார், கே.ஆர்.அபரஞ்சி, ஜெ. பால முருகன் ,ஜி ஜே பிரபு, எஸ். தனசேகர், க.வினோத், ஆர். டி.சங்கர் நானா முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்த்தனன், , மா. முத்துக்குமார், நா. சுந்தரம், எஸ். சந்தியாகு, சே. தமிழ்வா ணன், வி.சந்தான லட்சுமி, சி.பா. ஜெயராமன், மா.ஜெய் சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன்,டி. சதீஷ்கு மார், வே. பா. பிரபாகரன், பா கதிரவன், ஆர் ரவிச்சந்தி ரன், எல். சத்திய நாராய ணன், எஸ் புகழேந்தி, ஆர் ஏ. அஸ்லாம், டி கதிரவன் (எ) ராஜா, மா.பரத் குமார், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன், நா. மோகன், பி. செந்தில் குமார் ஏ .திருப்பதி எம். சண் முகசுந்தரம் பா அஜித் குமார் கே ஆர் மணிரத்தினம் எம் தமிழ்வாணன் ராஜ் , பா. விஷ்ணு சக்கரவர்த்தி, க. பாலாஜி, டி. பிலிப்ஸ், எஸ் இம்ரான் கான் எஸ். வினோத் குமார் வி.எல். யஸ்வந்த் ஆகி யோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நல திட்ட உதவி வழங்கும் விழாவில் 700 வட இந்தியர்களுக்கு நல திட்ட உதவிகளை கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்களும் கழக இளம் பேச்சாளர் மு ரோஜா அவர்களும் வழங்கி சிறப்பிக் கின்றார்கள்.

மேலும் இப்பொதுக்கூட் டத்தில்,மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி, அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், மாநில நிர்வாகி கள் ப.ரங்கநாதன் MLA கே. எஸ்.இரவிச்சந்திரன், தமி முன் பிரசன்னா, கே.சந்துரு சி.மகேஷ்குமார், சங்கரிநாரா யணன், எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த் கே.எஸ்.எம். நாதன் பரிதிஇளம்சுருதி MC ஆர்.வரதன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் வட்ட கழக செயலாளர்கள் ஜி.ராம மூர்த்தி பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறுகிறார் கள்.

சி.பி.எஸ்.இ. பொதுத்தேர்வில் முறைகேடு – சென்னையில்

அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பினர் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஜூன் 9 -

சி.பி.எஸ்.இ தேர்வில் நிகழ்ந்த முறைகேடுகளை கண்டித்து, சென் னையில் உள்ள மண்டல அலுவல கம் அருகே அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பினர் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

பன்னிரெண்டாம் வகுப்பு சி.பி. எஸ்.இ பொதுத்தேர்வில் டிஜிட்டல் விடைத்தாள் மதிப்பீட்டு முறை அறி முகப்படுத்தப்பட்டது.

விடைத்தாளை திரையில் மதிப்பி டும் இந்த புதிய நடைமுறையால், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு ஏராளமான மாணவர்கள் பாதிக்கப் பட்டனர்.

மேலும் டிஜிட்டல் மதிப்பீட்டு முறை யில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந் ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதனிடையே 19 வயது இளைஞர் ஒருவர், சி.பி.எஸ்.இ மதிப்பீட்டுத் தளத் தில் உள்ள பாதுகாப்பு குறைபாட்டை பொதுமக்களுக்கும் மாணவர்களுக் கும் அம்பலப்படுத்தினார்.

இந்த நிலையில், சி.பி.எஸ்.இ தேர் வில் நிகழ்ந்த முறைகேடுகளை கண் டித்து, சென்னை அண்ணா நகரில் உள்ள மண்டல அலுவலகம் அருகே அனைத்திந்திய மாணவர் கூட்ட மைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதையடுத்து, சி.பி.எஸ்.இ மண் டல அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற மாணவர் கூட்டமைப்பினர் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப் பட்டனர்.

மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்புரை! கவிஞர்கள் உரையாற்றினர்!

திருச்சியில் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம்!

முன்னாள் அமைச்சர் – முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையேற்று சிறப்புரை!

திருச்சி, ஜூன் 9 -

முத்தமிழ் அறிஞர், கலை ஞர் அவர்களின் 103ஆவது பிறந்தநாள் விழாவை முன் னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரம் மாண்ட கருத்தரங்கம் (ஜூன் 7, 2026) திருச்சியில் அமைந் துள்ள புகழ்பெற்ற தேவர் ஹாலில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செய லாளரும், முன்னாள் அமைச்ச ருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கி சிறப்பு உரை ஆற்றினார்.

மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் அனைவரை யும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

"கலைஞரின் எத்தனை கலைஞர்" கருத்தரங்கம்:

விழாவின் முக்கிய நிகழ் வாக "கலைஞரின் எத்தனை கலைஞர்" என்ற தலைப்பில் கவியரங்கம் மற்றும் கருத்தரங் கம் நடைபெற்றது.

இதில் தமிழகத்தின் முன் னணி கவிஞர்கள் பங்கேற்று கலைஞரின் பன்முகத்தன் மையை பின்வரும் தலைப்பு களில் போற்றிப் புகழாரம் சூட்டினர்.

கவி அரங்கத் தலைவர் கவி ஞர் நெல்லை ஜெயந்தா, இலக் கிய இமயம்: கவிஞர் ஆலங் குடி வெள்ளைச்சாமி, திரை தமிழ் சிற்பி: கவிஞர் அருண் பாரதி, சமூகப் போராளி: கவி ஞர் ராகவ் ரமேஷ், அரசியல் சாணக்கியர்: கவிஞர் தஞ்சை இனியன்.

நிகழ்ச்சியின் நிறைவாக, மார்க்கெட் பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.ஜி.பாபு அனைவருக்கும் நன்றி உரை ஆற்றினார்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. இந்த விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய் துள்ளனர்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேக ரன், சபியுல்லா, மாநில அணி நிர்வாகி செந்தில் மற்றும் , மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் திரளாகப் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராஜேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகையை வழங்கினார். அருகில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.சேகர், த.ஜெயகுமார், இ.எஸ்.பெர்னாட், கழக அணிகளின் நிர்வாகிகள் அ.தமிழ்மாறன், டாக்டர் கிருத்திகா தேவி, பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், விஜயரங்கன், கல்யாணி, ஷாஜகான், ஜீவன், தேவராஜ் மணிகண்டன், கதிரவன், குமரன், சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3 அன்று தேனி மற்றும் பெரியகுளம்

அரசு மருத்துவமனையில் பிறந்த 11 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. வழங்கினார்!

தேனி, ஜூன் 9 -

தேனி வடக்கு மாவட்டம் போடி மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவமனையில் ஜூன் 3 ஆம் தேதி கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அன்று பிறந்த குழந்தை களுக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சொந்த செலவில் தங்க மோதி ரம் 11 குழந்தை களுக்கு வழங் கினார்

தேனி வடக்கு மாவட்டம் போடி மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை களுக்கு முத்த மிழறிஞர் கலைஞர் அவர்க ளின் பிறந்தநாள் முன்னிட்டு ஜீன் 3 ம் தேதி அன்று பிறந்த 11 குழந்தைகளுக்கு சொந்த செலவில் தங்க மோதிரத்தை தங்க தமிழ்ச்செல்வன் வழங்கி னார்.

உடன் போடி நகர செய லாளர் புருஷோத்தமன், வடக்கு மாவட்ட இளைஞ ரணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப்கான் தகவல் தொழில் நுட்பத்துடன் அமைப்பாளர் ம கே ஸ் வரன் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விஜய குமார் . மற்றும் கழக முன் னோடிகள் கலந்து கொண்ட னர்

இ தனைத் தொடர்ந்து தேனி மாவட்டம் தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பி னருமான தங்க தமிழ்ச் செல் வன் தனது சொந்த செலவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று போடி அரசு மருத்துவமனையில் பிறந்த 4 பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து தாய்மார்களுக்கு பழங்கள் மற்றும் ஊட்டச்சத்து பொருட்களையும் தங்க தமிழ்ச் செல்வன் தலைமை யில் வழங்கப்பட்டது.

இதே போன்று பெரியகு ளம் அரசு மருத்துவமனையில் முன்னாள் சட்டமன்ற உறுப் பினர் சரவணக் குமார் மற் றும் மாவட்ட அவைத் தலை வர் பிடி செல்லப்பாண்டியன் முன்னிலையில் ஜீன் 3ம் தேதி கலைஞர் பிறந்த நாளில் பிறந்த 5 பெண் குழந்தைகள் மற்றும் 2 ஆண் குழந்தைகள் உள்பட 7 பேருக்கு தங்க மோதிரத்தை தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. வழங்கினார்.

இதில் நகர, முகமது இலி யாஸ் நகராட்சி தி.மு.க. சேர் மன் சுனிதா செல்வக்குமார் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் – புத்தெழுச்சி நாள் மாபெரும் புகழாரங்கம் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலையில் கவிப்பேரரசு வைரமுத்து, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், கழக கல்வியாளர் அணி செயலாளர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன். எம்.பி. ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சொ. வேலு.எம்.சி, கோ.ஏகப்பன், கே எஸ் எம் நாதன், புனிதவதி எத்திராசன். எம் சி, ப.ஸ்ரீராமுலு எம் சி.பரிதி இளம் சுருதி. எம்சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி,ஜி. தாமோதரன், அ.நிர்மலா தேவி, எல். சுந்தர்ராஜன் எம் சி, டி.வி வேலு, எம். மணிமாறன், கே. அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் எஸ். டால்பின் ஹரி, எஸ்.ரசூல், வான்மதி கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.